# புலமைக்கதிர் 5

புதிய பாடத்திட்டம் - 2020

**தாய்மொழி** **நேரம்:- 01.00மணி**

**01. சரியான விடையின் கீழ் கோடிடுக**

**1. உயிர் மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?**

1. 18 2. 216 3. 247

**2. வனிதா சிறுகதை எழுதினாள். இவ்வாக்கியத்தின் பயனிலைச் சொல்?**

1. வனிதா 2. எழுதினாள் 3. சிறுகதை

**3. இடப்பெயரைக்குறிக்கும் சரியான சொல் எது ?**

1. கார்த்திகை 2. கிளைகள் 3. வவுனியா

**4. இங்கே வந்தவர் யார்☐ இவ் வாக்கியத்தின் இறுதியில் வர வேண்டிய நிறுத்தற் குறி**

1. முற்றுப்புள்ளி 2. காற்புள்ளி 3. வினாக்குறி

**5. பெருமை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்**

1. சிறுமை 2. சிருமை 3. சிறிது

**6. அஃறிணை ஒருமை பெயர்ச் சொல்?**

1. படகுகள் 2. நாதன் 3. சங்கு

**7. முள் + செடி என்பதை சேர்த்தெழுதுக**

1. முட்செடி 2. முள்செடி 3. முட்ச்செடி

**8. வீரன் என்பதன் எதிர்பாற் சொல்**

1. வீரசக்தி 2. வீறாங்கனை 3. வீராங்கனை

**9. நெல்லின் இளமைப்பெயர்**

1. நாற்று 2. குட்டி 3. கன்று

**10. 25வது ஆண்டு கொண்டாடப்படும் விழா**

1. பவளவிழா 2. மணிவிழா 3. வெள்ளி விழா

**02. பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புக**

1. பாம்பைக் கண்ட சிறுவர்கள் ............................... (அலரி, அலறி)க் கொண்டு ஓடினர்.
2. இயற்கைப் பானமாக ................................. (இளனீர், இளநீர்) அருந்துவது நல்லது.
3. பனை ................................. (மரம் / மறம்) முறிந்து விழுந்தது.
4. தம்பி ........................................ (சிகப்பு / சிவப்பு) நிறப்பூக்களைப் பறித்தான்.
5. ................................. (கீறை / கீரை) வகைகள் உடல் நலத்திற்கு இன்றியமையாதவை.

திரு. க. சந்திரகுமார் . --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

**03. ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக?**

1. மதி - ..............................................
2. வடு - ..............................................
3. வாகை - ..............................................
4. சூரியன் - ..............................................
5. இன்பம் - ..............................................

**04. எதிர்க்கருத்து தருக**

1. மேடு - ..............................................
2. வரவு - ..............................................
3. பிறப்பு - ..............................................
4. இம்மை - ..............................................
5. இன்பம் - ..............................................

**05. சேர்த்தெழுதுக**

1. மண் + குடம் - ..............................................
2. நெல் + வயல் - ..............................................
3. பனை + காய் - ..............................................
4. பச்சை + கிளி - ..............................................
5. அடி + சுவடு - ..............................................

**06. சரியாக எழுதப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அறிஞ்ஞன் | அறிஞன் | அரிஞன் | அரிஞ்ஞன் |
| 2. | உலவன் | உளவன் | உழவன் | உளவன் |
| 3. | எளிமை | எலிமை | எழிமை | எலிம்மை |
| 4. | கூறியது | கூரியது | குரியது | கூறிய்யது |
| 5. | பளமொழி | பலமொழி | பழமோலி | பழமொழி |

**07. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக**

1. உழவு

..........................................................................................................................................

2. அலை

..........................................................................................................................................

திரு. க. சந்திரகுமார் . --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

3. வால்

..........................................................................................................................

4. கோள்

..........................................................................................................................

5. பழம்

..........................................................................................................................

**08. இறந்த கால வாக்கியங்களை நிகழ்கால வாக்கியங்களாக மாற்றுக**

1. சிறுவன் கவிதை எழுதினான்

..........................................................................................................................

2. மாலா பாடம் படித்தாள்

..........................................................................................................................

3. தங்கை நடனம் ஆடினாள்

..........................................................................................................................

4. பசுக்கள் புல் மேய்ந்தன

..........................................................................................................................

5. ஆசிரியர் பாடசாலைக்கு வந்தார்.

..........................................................................................................................

**09. விடை தருக.**

1. ஒரு நூலை வெளியிடுவோர் அந்நூலைப் பற்றிக் கூறும் உரை

..........................................................................................................

2. "நிழலின் அருமை வெயிலிற் தெரியும்" என்பதன் பொருள் யாது?

..........................................................................................................................

..........................................................................................................................

**10. சரியான வினைச் சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.**

1. பறவையினங்களின் இனிய கானத்தால் அப்பகுதி முழுவதும் இசையில் ............................................................ (மூழ்கியிருந்தது / மூழ்கியிருந்தன.)

2. மரக்கிளைகளினூடாக வந்த இளஞ்சூரியனின் கதிர்கள் எனது மேனியை இதமாக வருடிச் ..................................................... (சென்றன / சென்றது)

3. நீரின் மீது அலைகள் அங்குமிங்கும் எழுந்த போது, அவை அலங்காரம் செய்யப்பட்ட நீல வண்ண ஆடையைப் போலக் ............................................................. (காட்சியளித்தன / காட்சியளித்தது)

11. **கீழுள்ளவற்றை நன்றாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக?**

மழையைப் பெறுவதற்கு மனிதனுக்குக் காடுகள் அவசியமாகின்றன. விலங்குகள் உயிர் வாழ்வதற்கும் காடுகள் தேவைப்படுகின்றன. மனிதன் விவசாயத் தேவைகளுக்காகக் காடுகளை அழிக்கின்றான். சனத்தொகை அதிகரிப்புக் காரணமாக வதிவிடத் தேவையும் அதிகரிக்கின்றது. அதனால் காடுகள் மேலும் மேலும் அழிக்கப்பட்டு, குடியேற்றங்கள் அமைக்கப்படுகின்றன. தனக்குத் தேவையான பல்வேறு பொருட்களைத் தயாரிப்பதற்காகவும் மனிதன் காடுகளை அழிக்கின்றான். இதனால் விலங்குகள் தம் இருப்பிடங்களை இழந்து வருகின்றன. காடழிப்புக் காரணமாகக் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு, மனிதர்கள் நீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றனர். காடுகளை அழிப்பது நம்மை நாமே அழித்துக் கொள்வதற்குச் சமமாகும்.

**01. மேற்படி பகுதியிலிருந்து பின்வரும் வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1. "உற்பத்தி" செய்தல் என்ற பொருள் தரக்கூடிய சொல் யாது?
 ..............................................................................................................
2. குடியேற்றங்கள் ஏன் அமைக்கப்படுகின்றன?
 ..............................................................................................................
3. இங்கு அரவு, விசிற, கீழ்க்கால் ஆகியவை காணப்படும் சொல் யாது?
 ..............................................................................................................
4. "காடழிப்பு" என்பதை பிரித்தெழுதுக?
 ..............................................................................................................
5. இங்கு காணப்படும் நிகழ்கால, பலவின்பால் சொல் ஒன்று தருக.
 ..............................................................................................................
6. பந்தியில் எத்தனை பன்மைச் சொற்கள் உள்ளன?
 ..............................................................................................................

"உடையக்கூடிய பொருட்கள் உள்ளன" என்பதைக் குறிப்பதற்காகப் பெட்டிகளில் பயன்படுத்தப்படும் குறியீடு எது?



(1) (2) (3) (4)